

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக**

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B.அர்ஜுனன்

நவம்பர் 2004

மரம் 4 கனி 12




**வாசகர் கவனத்திற்கு**

எங்களோடு கடிதத்தொடர்பு கொள்ளும் போது உங்களுடைய பதிவு எண் எழுத மறக்கவேண்டாம். இவ்விதழை மற்றவர்களுக்கும் படிக்க கொடுங்கள் கர்த்தர் உங்களோடு இருப்பாராக!

### இயேசுவின் சொந்தங்கள்

இயேசுவின் நாட்களில்
இவ்வாறாக அவர் பேச நாம் கேள்விப்பட வில்லை:
"என் வீடு"
"என் தேசம்"
"என் பண்ணை"
"என் புத்தகங்கள்"
"என் தொழில்" அல்லது
"என் பணம்"
ஆனால் எப்படியாகிலும் நாம்
இவ்வாறாக அவர் பேசக் கேள்விப்படுகிறோம்:
"என் பிதா" (மத்தேயு10:33),
"என் சிநேகிதர்கள் (யோவான்15:14),
"என் சீஷர்கள்" (யோவான்15:8),
"என் சபை" (மத்தேயு16:18),
"என் நாமம்" (மத்தேயு18:20),
"என் வசனம்" (மாற்கு8:38),
"என் ஆடுகள்" (யோவான்10:27),
"என் சந்தோஷம்" (யோவான்17:13)

உலகப்பிரகாரமான காரியங்களைக் காட்டிலும் ஆவிக்குரிய சொந்தங்களைப்பற்றிய நம்முடைய மாதிரியான நினைவே மிகச் சிறந்தது.

via Manhattan Messenger
Tampa,FL

**கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் (ரோமர்16:16)**

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
# THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 4 நவம்பர் 2004 கனி - 12


ஆசிரியருரை

## இயேசு மேன்மையுள்ளவர்
## Jesus Is Preferred



இன்று உலகத்திலே நான் பெரியவன் நீ பெரியவன் என்று அடித்துக் கொண்டு இருக்கிறார்கள். சர்வலோகத்திற்கும் ஒரு பெரியவர் இருக்கிறார் என்பதை மறந்து போய்விடுகின்றனர். உலகத்திலே எத்தனையோ தீர்க்கதரிசிகள் தோன்றினார்கள். ஆனால் "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை;" (லூக்.7:28). இந்த யோவான்ஸ்நானகன் இயேசுவுக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டவன். யோவான்ஸ்நானகன் இயேசுவைக் குறித்து சாட்சி கொடுக்கும்போது, "எனக்குப் பின்வருகிறவர் எனக்கு முன்னிருந்தவர், ஆகையால் அவர் என்னிலும் மேன்மையுள்ளவர் என்று நான் சொல்லியிருந்தேனே, அவர் இவர்தான் என்று சத்தமிட்டுக் கூறினான்" (யோவா.1:15). இயேசு கிறிஸ்து வந்து 2000 வருடங்கள்தானே ஆகிறது என்று அநேகர் லேசாக பேசிவிடுகின்றனர். இங்கு இயேசுவுக்கு முன்னோடியாகவும் கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தும்படியாகவும் வந்த யோவான்ஸ்நானகன், எனக்குப் பின்வருகிறவர் எனக்கு முன்னிருந்தவர் அவர் என்னிலும் மேன்மையுள்ளவர் என்று சொல்லி சாட்சி பகருகிறான்.

சிலர் யோவன்ஸ்நானகனையே கிறிஸ்து என்று நினைத்தனர். இன்றும்கூட அநேகருக்கு அறிமுகமான ஊழியர் ஒருவர் வந்துவிட்டால் போதும் அவர் தேவனுக்கு நிகரானவர் என்று

கூறிவிடுவார்கள். ஆனால் இங்கு எருசலேமிலிருந்த யூதர்கள் ஆசாரியரையும் லேவியரையும் யோவான்ஸ்நானகனிடம் அனுப்பி நீர் யார் என்று கேட்ட பொழுது அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டதுமன்றி, நான் கிறிஸ்து அல்ல என்றும் அறிக்கையிட்டான். மேலும் "அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல என்றான்" (யோவா.1:27). எந்த அளவிற்கு இயேசுவுக்கு முன் தான் தகுதியற்றவன் என்பதை ஒரு பெரிய தீர்க்கதரிசியாக இருந்த யோவான்ஸ்நானகன் அறிக்கையிடுகிறான் என்பதைப் பாருங்கள். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு தீர்க்கதரிசியே இவ்விதமாக தாழ்த்துவானே யானால் நாமெல்லாம் எம்மாத்திரம்! ஆகையால்தான் நூற்றுக்கு அதிபதியும் கூட தன் வேலைக்காரனுடைய சுகத்துக்காக இயேசுவை நோக்கி வேண்டிக்கொள்ளும்போது "நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" என்றான் (லூக்7:7). இயேசு ஆண்டவர் இதைக் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டு இஸ்ரவேலுக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்றார். ஆம் பிரியமானவர்களே இயேசு எல்லாரிலும் மேன்மையானவர். அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. அவர் உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும்படியாக வெளிப்பட்டார்.

"யோவான்ஸ்நானகன் வனாந்தரத்தில் ஞானஸ்நனங் கொடுத்து, பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தான். அப்பொழுது யூதேயா தேசத்தார் அனைவரும் எருசலேம் நகரத்தார் யாவரும் அவனிடத்திற்குப்போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான்நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்" (மாற்.1:4,5). இங்கு யோவானால் யூதேயா, மற்றும் எருசலேம் நகரத்தார் யாவரும் அவனிடத்தில் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று வாசிக்கிறோம். இந்த யோவன்ஸ்நானகன் அவரைக் குறித்து ஜனங்களிடத்தில் சொன்னது "இதோ, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவர் எனக்கு முன்னிருந்தபடியால் என்னிலும் மேன்மையுள்ளவரென்று நான் சொன்னேனே, அவர் இவர்தான். நானும் இவரை அறியாதிருந்தேன்; இவர் இஸ்ரவேலுக்கு வெளிப்படும் பொருட்டாக, நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுக்க வந்தேன் என்றான்" (யோவா.1:29-31). பின்னும் யோவன்ஸ்நானகன் சாட்சியாக சொன்னது: ஆவியானவர் புறாவைப்போல வானத்திலிருந்திறங்கி, இவர் மேல் தங்கினதைக்

கண்டேன் ........ ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்; ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங் கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்து வருகிறேன் என்றான்" (யோவா.1:32-34). தனக்குப்பின் வருகிற மேன்மையுள்ளவராகிய இயேசுவை அறிமுகப்படுத்துவதில் யோவான்ஸ்நானகன் கடுகளவும் வெட்கப்படவுமில்லை, பயப்படவுமில்லை; தன்னை பின்பற்றி வந்த சகல ஜனங்களும் இடறிப்போவார்களே என்று அச்சம் கொள்ளவுமில்லை. தன்னை ஏற்படுத்தினவருக்கு ஏற்றார்போல இயேசுவைக்குறித்து, முன்னோடியாகவும் பாதையை செவ்வை பண்ணுகிறவனாகவுமிருந்துகொண்டு சாட்சி பகர்ந்தான். "யோவானும் அவனுடைய சீஷரில் இரண்டுபேரும் நிற்கும்போது, இயேசு நடந்து போகிறதை அவன் கண்டு; இதோ, தேவ ஆட்டுக்குட்டி என்றான். அவன் அப்படிச் சொன்னதை அவ்விரண்டு சீஷருங்கேட்டு, இயேசுவுக்குப் பின் சென்றார்கள்" (யோவா.1:35-37). இதைக் கண்ட யோவான்ஸ்நானகன் அவர்களைத் தடுத்தானா? அவனுடைய வேலையே கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துவதே! அவர் வந்தபின்பு ஜனங்களை அவருக்கு நேரே வழிநடத்தினான். இன்றைக்கு அனேகர் தங்களுக்காக ஆட்களை சேர்க்கிறார்களே தவிர, இயேசுவுக்கு நேரே ஜனங்களை வழிநடத்துவதில்லை.

பிரியமான சகோதரனே, சகோதரியே நீயும் இயேசுவை பின்பற்றி வர ஆயத்தமாயிருக்கிறாயா? இன்றைக்கு இருக்கும் தலைவர்களை நீ பின்பற்றினால் அவர்கள் தலை இருக்கும்வரை நீ அவர்களின் வழியே நடக்கலாம். அதற்கு பின்பு நீ யாரைப்பின்பற்றுவாய்! நீ பின்பற்றும் தலைவன் உனக்காக தலையை கொடுக்க மாட்டான். மாறாக உன் தலையை வாங்கிவிடுவான். ஆனால் உனக்காக ஜீவனையே பலியாக ஒப்புக்கொடுக்க வந்தவர் தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுகிறிஸ்து. அவர் இன்றும் ஜீவிக்கிறார். அவரை தேவன் முத்திரித்திருக்கிறார். அவரைக்குறித்து கேள்விப்பட்டவர்கள் அநேகர். ஆனால் அவரை அறிந்து ஏற்றுக்கொண்டவர்களும் அவரை புரிந்து கொண்டவர்களும் சிலரே. அதில் ஒருவராக நீ இருக்கிறாயா?

ஒரு முறை பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போஜனம்பண்ண வரவேண்டுமென்று இயேசுவை வேண்டிக்கொண்டான். அவர் அந்தப்படியே பரிசேயனுடைய அழைப்பை ஏற்று அங்கு சென்று பந்தியிருந்தார். அப்பொழுது இயேசுவை கேள்விப்பட்ட பாவியாகிய ஒரு ஸ்திரீ அந்த பரிசேயன் வீட்டிற்கு சென்று இயேசுவின் பின்னாக

நின்று அழுதுகொண்டு அவருடைய பாதங்களை தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து பரிமளதைலத்தைப் பூசினாள். உங்களுக்குத் பெண்களுக்கு கூந்தல் எதற்காக கொடுக்கப்பட்டிருக்கிறது என்று. மகிமையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த மகிமையான கூந்தலைகொண்டு தன் கண்ணீரினால் நனைத்த அந்த பாதங்களை துடைத்தாள். தான் பாவி என்பதை ஒப்புக்கொண்ட அந்த ஸ்திரீ ஆண்டவர் இன்னார் என்பதை அறிந்தபடியால் அவருக்கு மேன்மையான பரிமளதைலத்தைப் பூசவும் தன் மேன்மையான, மகிமையான கூந்தலினால் அவருடைய பாதங்களை துடைக்கவும் முத்தம் செய்யவும் முந்திக்கொண்டாள். இன்றைக்கு ஆண்டவருடைய கற்பனைகளை ஒத்துக்கொள்வார்கள். ஆனால் தங்களுடைய இருக்கையைவிட்டு சற்றும் இறங்கமாட்டார்கள். பரிசேயரும் கூட அப்படித்தான் உயிர்த்தெழுதல், தேவ தூதன், ஆவி எல்லாவற்றையும் ஒத்துக் கொள்வார்கள். உள்ளான மனதில் தொடாதே, தீண்டாதே, ருசிபாராதே என்கிற காரியங்களை வைத்துக்கொண்டு பாரம்பரியமாக வாழ்ந்துவருவார்கள். இந்த பரிசேயனை கர்த்தர் பார்த்து "நீ என் கால்களுக்கு தண்ணீர்தரவில்லை, இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். நீ என்னை முத்தஞ்செய்யவில்லை, இவளோ, நான் உட் பிரவேசித்தது முதல், என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள். நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை, இவளோ, என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள். ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன்: இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது; இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே என்றார்" (லூக்.7:44-47). மேன்மையானவரை நம்சொந்த இரட்சகராக பெறவேண்டுமானல், நாம் முதலாவது நம்முடைய மேன்மையை விட்டுக்கொடுக்க வேண்டும். அவர் நமக்காக தம்மைத்தாமே தாழ்த்தி சிலுவையில் அறையுண்டிருக்கும்போது நமக்கு எதற்கு மேன்மை. அவரை சுமக்கும் கழுதையாக நாம் மாறவேண்டும். அது ஒரு பெரிய பாக்கியமே. மாபெரும் தீர்க்கதரிசியே அவருடைய பாதரட்சையின்வாரை அவிழ்ப்பதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொல்லியிருக்கும்போது, நாம் எம்மாத்திரம்?

ஆண்டவர் இயேசுவுக்கு வானத்திலும் பூமியிலும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை அறியாத மக்கள் அன்றும் இருந்தார்கள். இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள். கப்பர் நகூமுக்கு இயேசு சென்றபோது நாலுபேர் ஒரு திமிர்வாதக்காரனைச் சுமந்துகொண்டு அவரிடத்தில் வந்தார்கள் "இயேசு அவர்கள்

விசுவசாத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார். அங்கே உட்கார்ந்திருந்த வேத பாரகரில் சிலர்: இவன் இப்படி தேவ தூஷணம் சொல்லுகிறதென்ன? தேவர் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கதக்கவர் யார் என்று தங்கள் இருதயங்களில் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார்களென்று இயேசு உடனே தம்முடைய ஆவியில் அறிந்து, அவர்களை நோக்கி: நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திக்கிறதென்ன? உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்வதோ, அல்லது உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று சொல்வதோ, எது எளிது? பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு, உன்வீட்டுக்குப்போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மாற்.2:5-11). அவர் மேன்மையுள்ளவராக சகல அதிகாரமும் பெற்றவராகையால் இப்படி சொல்லி அவனை சுகப்படுத்தினார். பிசாசுகளும் அவருக்கு பயந்து நடுங்கின. "இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு தேவன் பேரில் உமக்கு ஆணையென்று மிகுந்த சத்தமிட்டு சொன்னது" (மாற்.5:7). ஆனால் அவருடைய சொந்த ஊராரும் சொந்த ஜனங்களும் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்று பார்க்கிறோம். "இவன் தச்சன் அல்லவா? இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? என்று சொல்லி, அவரைக் குறித்து இடறலடைந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் இனத்திலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றார்" (மாற்.6:3,4). ஆம், அந்தப்படியே இன்று கிறிஸ்தவர்கள்தான் சில சமயங்களில் யூதாசைப்போல, கிறிஸ்துவுக்கு விரோதமாக செயல்படுகிறவர்களாக மாறிவிடுகிறார்கள்.

இச்செய்தியை வாசிக்கும் என் அன்பு சகோதரனே சகோதரியே, உனக்காக ஜீவனை கொடுக்க வந்த ஆண்டவர் இயேசுவை குறித்து நீ என்ன நினைக்கிறாய்? அவர் உன்னை ஒருபோதும் தள்ளாதவர். அவர் உனக்காக பிதாவினிடம் பரிந்து பேசுகிறவர். அவர் உன் நோய்களை எல்லாம் குணமாக்குகிறவர். அவர் உன் வாழ்வில் அற்புதம் செய்கிறவர். யார் உன்னை கைவிட்டாலும் அவர் கைவிடாதவர். அவர் மேன்மையுள்ளவர். அவரை நீ மேன்மைப்படுத்துவாயானால் அவர் உன்னை மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டுவார்.

# ராஜ்யத்தைப் பிரசங்கித்தல்
# Preaching the Kingdom

**J.C.Choate**



பழைய ஏற்பாடு முழுவதிலும் வரப்போகிற ஆவிக்குரிய ராஜ்யத்தைப் பற்றிய ஒரு மாபெரும் செயலாற்றல் சொல்லப்பட்டது. ஏசாயா காடைசி நாளில் கர்த்தருடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என முன்னறிவித்தான் (ஏசா.2:2,3). தானியேல் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார் என்றான் (தானி.2:44). யோவேல் அந்நாட்களில் மாம்சமான யாவர் மேலும் கர்த்தருடைய ஆவி ஊற்றப்படும் என்றான் (யோயே.2:28,29), மேலும் பேதுரு யோவேலின் தீர்க்கதரிசனம் அப்.2-ல் எழுதப்பட்டுள்ள மிகமுக்கியமான நிகழ்ச்சியில் நிறைவேற்றப்பட்டது என்றான்.

யோவான் ஸ்நானகன் வந்து பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என பிரசங்கித்தான் (மத்.3:1,2), மேலும் கிறிஸ்து தம்முடைய சமூகத்தில் நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று சொன்னான் (மாற்.9:10. கடைசியாக, கிறிஸ்து தாம் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்பது மெய் என, வெளிப்படுத்தும்படி இந்தக் கல்லின் மேல் தம்முடைய சபையை தான் கட்டுவேன் எனச் சொன்னார் (மத்.16:18,19; 1கொரி.3:11). அவர் மனுஷருக்கும் ஸ்திரீகளுக்கும் ராஜ்யம் அல்லது சபைக்குள் பிரவேசிப்பதற்கு அவர்கள் என்ன செய்யவேண்டுமென சொல்லும் அதிகாரமாகிய பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை அப்போஸ்தலருக்குக் கொடுப்பேன் என வாக்களித்தார்.

ராஜ்யத்தின் ஸ்தாபனத்தைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் எருசலேமில் அப்போஸ்தலர்மேல் பரிசுத்த ஆவியின் பலமாக ஊற்றப்பட்டு, இவ்விதமாக நிறைவேற்றப்பட்டது என்றும், மேலும் ஆவியானவர் அவர்களுக்கு வார்த்தையினால் பொழிந்தருளப்பட்டு அவர்கள் வெவ்வேறு பாஷைகளில், அல்லது அந்நிய பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள் என்றும் அப்போஸ்தலர் 2-ல் நாம் காண்கிறோம். இதுவே யோவான் சொல்லியிருந்ததும், பரலோகத்திலிருந்து வரப்போகிறதும், கிறிஸ்து தாம் கட்டுவேன் எனச் சொல்லியிருந்ததுமான சீக்கிரமாய் ஸ்தாபிக்கப்படபோகிற

ராஜ்யமாயிருந்தது. அதன்பின் அப்போஸ்தலர், பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களைப் பயன்படுத்தினார்கள் அல்லது முதன் முறையாக அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து பாவியான மனிதன் எவ்வாறு இரட்சிக்கப்பட முடியும் என்பதை வெளிப்படுத்திய சபையாயிருந்தது. அதைக்கேட்டு, விசுவாசித்து, தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, தங்களுடைய பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் இரட்சிக்கப்பட்டு, கர்த்தர்தாமே சம்பாதித்துக்கொண்ட சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

ஆனபடியால் ராஜ்யமும் சபையும் ஒரே நிறுவனமாக, தேவனுடைய வீடாக அல்லது கிறிஸ்துவினுடைய ஆவிக்குரிய சரீரமாயிருக்கிறது (1தீமோ.3:15; 1கொரி.12:27). பவுல் கொலேசெய சபைக்கு, "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, நமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தின வருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறேன்" என தேவனைக் குறித்து பேசி உணர்த்தினான் (கொலோ.1:13). எபிரெய ஆசிரியர், "ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்" (எபி.12:28) என்றான். இப்பொழுது அவன் எந்த ராஜ்யத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தான்?தேவனுயைடய ராஜ்யம், பரலேகத்தி லிருந்து வந்த ராஜ்யம், கர்த்தருடைய சபை, கர்த்தர் இரட்சித்து அதில் சேர்த்துக்கொண்ட ஜனங்களை உள்ளடக்கிய, அவருடைய சரீரத்தின் அங்கங்களாக உருவாயிருக்கின்ற, கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாயிருக்கின்ற, மேலும் சபையாயிருக்கின்றவற்றைக் குறித்தே பேசினான் (எபே.1:22,23; கொலோ.1:18).

அடுத்தாற்போல் கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், கிறிஸ்துவைப்பற்றி வேதவாக்கியம், "அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்" (அப்.1:3). வேறொரு சமயத்தில், கிறிஸ்து எருசலேமில் சீக்கிரமாய் ஸ்தாபிக்கப்படப்போகிற ராஜ்யம் அல்லது சபையைக் குறித்து அப்போஸ்தலருக்குக் கடைசி அறிவுரைகளைக் கொடுக்கின்றார். அவர் தொடர்ந்து, பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்என்றார்" (அப்.1:8).

எனவே அப்போஸ்தலர் 2-ல் கர்த்தருடைய சபையாகிய அந்த ராஜ்யம் தேவனுக்குக் கீழ்ப்படிந்த, சேர்க்கப்பட்ட 3000 பேருடன் ஸ்தாபிக்கப்பட்டது. அதில் சேர்க்கப்பட்டனர் (அப்.2:40). சுவிசேஷமானது மீண்டும் மீண்டும் எருசலேமிலும் யூதேயாவிலும் பிரசங்கிக்கப்பட்டு ஆயிரக்கணக்கானோர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அதே சபையில் சேர்க்கப்பட்டனர். ஆனால் அதிகமதிகமாய் சேர்க்கப்பட்டனர். இந்தக் குறிப்பில், வேதம், "அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கித்தான்" (அப்.8:5)எனக்கூறுகிறது. தொடர்ந்து நாம், "**தேவனுடைய ராஜ்யத்துக்கும்** இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்" (அப்.8:12) என வாசிக்கிறோம்.

எனவே நாம் என்ன அறிகிறோம்? நாம் தேவனுடைய ராஜ்யத்துக்கேற்றவைகளைக் குறித்து கர்த்தர் அப்போஸ்தலருக்கு என்ன அறிவுறுத்தினார் எனவும், அதன்பின் பிலிப்பு கிறிஸ்துவைக் குறித்து சமாரியர்களுக்கு என்ன பிரசங்கித்தான் எனவும் காண்கிறோம். ஆனால், அவன் இவ்வாறு பிரசங்கிக்கையில் அவர்களுக்கு தேவனுடைய ராஜ்யத்தையும் பிரசங்கித்தான் என்பது ஆச்சரியமே! ஏன் அங்கு ராஜ்யம் அல்லது சபை பற்றி அதிகமுக்கியத்துவப்படுத்தப் படுகிறது? ஏனென்றால் இது மனிதவர்க்கத்திற்கென்று தேவனுடைய முயற்சியின் மிக உன்னத கட்டமாக இருக்கிறது; இது அவர் இரட்சிப்பை அருளுவதற்கான சாதனமாகும். இது தேவனிடத்திலிருந்து வந்தது, இது தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருந்தது. கர்த்தர் இதை வாக்குப்பண்ணியிருந்தார், மேலும் அதில் இரட்சிக்கப்பட்டவர்கள் சேர்க்கப்பட்டவர்களாயிருந்தனர்! இதனுடைய முக்கியத்துவம் சொல்லிமுடியாதது.

சிலசமயங்களில் சபை முக்கியமானதல்ல என்றும் நாம் அது குறித்து அதிகம் பேசக்கூடாதென்றும் ஜனங்கள் கூறுகின்றதை நாம் கேள்விப்படுகிறோம். சபை இரட்சகர் அல்ல என்பது உண்மை, ஆனபடியினால் இது இரட்சிப்பட்ட மனிதர்களால் உருவாக்கப்பட்டுள்ளது; ஆனால் கிறிஸ்துவே அதற்காக மரித்து, தம்முடைய சுய இரத்தத்தினால் அதை சம்பாதித்துக் கொண்ட சபையின் இரட்சகர், மேலும் நாம் இரட்சிக்கப்பட்டு பரலோகத்திற்குச் செல்ல விரும்புவோமானால், நாம் அதனுடைய அங்கத்தினார்களாக இருக்கவேண்டும்.


ராஜ்யம் அல்லது சபைக்குறித்து சொல்லியிருக்கின்ற எல்லாவற்றையும் வேதவாக்கியங்களிலிருந்து நீங்கள் எடுத்துப்

போடுவீர்களானால், எவ்வளவாய் நீங்கள் இழந்து போனவர்களாயிருப்பீர்கள்? மேலும், கிறிஸ்து சபையைக் கட்டியிருந்தால், அவரே அதன் தலைவராகவும் அதன் இரட்சகராகவும், அதனுடைய மூலைக்கல்லாக தம்மை ஒப்புவித்தவராகவும் தம்முடைய நாமத்தினால் அதனை அழைத்தவராகவும் இருக்கிறார். அவர் அதைப் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுப்பேன் என வாக்களித்திருப்பாரனால், சபை முக்கியமற்றது என எவ்வாறு ஒருவர் நினைக்க முடியும்? மேலும் நாம் உலகத்திற்கு இதை பிரசங்கியாவிட்டால் இதைப்பற்றியும், இதனுடைய தெய்வீக ஆரம்பத்தினைப் பற்றியும், இதனுடைய நோக்கத்தைப் பற்றியும், இதன் ஊழியத்தைப் பற்றியும், இது தேவனுடைய ஒட்டுமொத்த திட்டத்தில் இதன் முக்கியத்துவத்தின் பிரமாண்டமான ஸ்தானத்தைப் பற்றியும் மனுஷர் எவ்வாறு அறிவார்கள்?

இறுதியாக , நாம் சபையை உயர்வாக மதிபோமாக, கர்த்தர் அன்பு கூருகிறவண்ணம் நாமும் அன்பு கூருவோமாக, அதிலுள்ள அங்கத்தினர்களுக்காக நன்றியுள்ளவர்களாயிருப்போமாக, மேலும் நாம் மிக ஆர்வத்துடன் மற்றவர்களுக்கு இதைப் பற்றிக் கூறுவோமாக அப்போது தான் முழு உலகமும் இது உண்மையாகப் பரவும். பவுல் கூறியது போல், "சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்" (எபே3:21).

---

# காட்சி – Perspective



*இருபது ஆண்டுகளுக்கு முன் வீடு ஒன்றினை நாம் கனா கண்டோம்.*

*ஆண்டுகளெல்லாம் பேச்சு,*
*திட்டம்,*
*மாதங்களெல்லாம் வியர்வையும் உழைப்பும்*
*கனவை மாற்றின*
*முழுமையான உண்மை நிலைக்கு*
*மதிலோடும், சன்னல்களோடும், தளங்களோடும் கதவுகளோடும்.*
*நமது வீடு .....*
*ஆனால் நாம் தாராளமாக கடனாய்கொடுத்தோம் நமது வீட்டை தேவனுக்கு*

அவ்வாண்டுகளெல்லாம், சொந்தக்காரரின் சந்தோஷம் இனிமையாயிருந்தது

அப்புறம் திகில்:

தீ! தீ!

ஜீவாலைகள், தாவின, நக்கின, டமார் சப்தம்,

நமது வீட்டை விழுங்கியது

நமது பொருட்கள்,

நமது வாழ்வு –

அளவில் ஒரு அரக்கன் யாராலும் நிறுத்த முடியல:

எல்லாம் – எல்லாம் நம்மால் அன்பு கூரப்பட்ட பொருட்கள், எல்லாம்

நம்மால் அறிப்பட்டவை மேலும் சொந்தமானவை

அவைகள் நம்முடையதல்ல கொஞ்சமும் இனி;

பூரண பயம் திகில் நிரப்பிற்று என் இருதயத்தை

அதன்பின், முடிவில், ஏற்றுக்கொள்ளல்:

மூர்க்கமான தீ எரித்துபோட்டது எனது உலகத்தை

கொடூர தோல்வியின் பயங்கரமான அந்நேரத்தில்

அனுமதித்தேன் அது கடந்து செல்ல.

இப்போ, எப்பேர்பட்ட புதுமையான உணர்வு என் இருதயத்தில்

நான் வண்ணம்பூசி மெருகேற்றியது போல்,

தீர்மானங்கள் உருவாகி, அளவு குறைந்து,

மேலும் உழைப்பு

நிலைமாறிய மதில்கள் மேலெழுந்தன

மரித்தோர் சுடுகாட்டின் மேல்

ஒருசமயம் நம்முடையதாயிருந்த வீட்டினது,

நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன் எப்போதும்

அதாவது இந்த கருவி ஆயத்தமாக்கப்பட்டிருந்தது எப்போதும்

தேவனுடைய கரங்களில் தேவையான சமான்கள் போல்;

இந்த மதில்கள் – இந்த விளக்கு – இந்த ஆசனங்கள்

அனைத்தும் அவருடையவை;

ஆனால், குறுகிய கால கட்டத்திற்கு,

அவைகளைக் கொடுக்கின்றார் அவர் இரவலாக நமக்கு

கண்காணிகளாக,

கவனிக்க அவருக்கென பயன்படுத்த.

நான் சொந்தமாகக் கொள்ளவில்லை சிறிதளவும்

என்னை சொந்தமாக்கிக்கொள்ளவில்லை ஒருபொருளும்

**-Betty Burton Choate**

பாடம் - 8

# சபையின் ஆராதனை
# WORSHIP OF THE CHURCH

**J.C.Choate**

சபை இரட்சிக்கப்பட்டவர்களைக் கொண்டு அமையபெற்றது. இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனைத் தொழுது கொள்வதும் அவருக்கு ஊழியம் செய்வதும் அதன் நோக்கமாகும். "வார்த்தையிலாவது, கிரியையிலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்" (கொலோ.3:17).

புதிய ஏற்பாட்டில் மூன்று விதமான ஆராதனைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலாவதாக, அறியாமையின் ஆராதனையைக் குறித்து நாம் வாசிக்கிறோம். பவுல் அத்தேனே பட்டணத்திலுள்ள மார்ஸ் மேடையில் இருந்த பொழுது, தன்னை சுற்றிலுமிருந்த விக்கிரகங்களையெல்லாம் கவனித்து பார்த்த பின், கூறியதாவது: "எப்படியெனில் நான் சுற்றித்திரிந்து உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்த பொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று, எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன். நீங்கள் அறியாமலிருக்கிற அவரையே உங்களுக்கு அறிவிக்கிறேன்" (அப்.17:23). அன்றைக்கு எப்படி அறியாமல் தொழுது கொண்டவர்கள் இருந்தார்களோ அப்படியே இன்றைக்கும் அநேகர் உள்ளனர். இன்று இலட்சக்கணக்கானோர் விக்கிரகங்களுக்கும் சொரூபங்களுக்கும் பணிந்து குனிவதோடு, வசனத்தை அறியாமல் அநேக மார்க்கப் பிரிவினரும் அப்படிச் செய்கின்றனர். இரண்டாவதாக, வீணான தொழுகை செய்வோரைக் குறித்தும் கர்த்தருடைய வசனம் பேசுகிறது. "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" என்று கிறிஸ்து சொல்கிறார் (மத்.15:9). பெரும்பாலான ஜனங்கள் இன்று இப்படியாக தொழுகின்றனர். அவர்கள் கர்த்தரை தொழுது கொள்கின்றனர் என்பது உண்மைதான், ஆனாலும் தேவனுடைய சித்தத்தின்படியிராமல் மனுஷருடைய உபதேசங்களையும் பாரம்பரியங்களையும் கொண்டவைகளாக அவைகள் இருப்பதால் அவர்களுடைய ஆராதனை வீணானது. மூன்றாவதாக, ஆவியோடும் சத்தியத்தோடும் கூடிய உண்மை

தொழுகையை தேவனுடைய வசனம் போதிக்கிறது. நாம் கிறிஸ்துவின் வார்த்தைகளை இப்படியாக வாசிக்கிறோம், "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும்" (யோவா.4:24). இவ்வகை ஆராதனையை மட்டுமே தேவன் ஏற்றுக்கொள்வார். இது கிறிஸ்துவின் நாளிலும் உண்மையாயிருந்தது. இன்றைக்கும் உண்மையாயிருக்கிறது. இந்த ஆராதனையே தேவனால் வழிகாட்டப்பட்டுள்ள முறையாகிய ஆவியோடும் (தாழ்மையோடும் புரிந்து கொள்ளுதலோடும், சத்தியத்தோடும்) உண்மையோடும், எழுதப்பட்டிருக்கிறபடி தொழுது கொள்ளுதலாகும். தேவன் தம்மைத் தொழுதுகொள்ளும் படி யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை. ஆனால் அவரைத் தொழுது கொள்பவர்கள் தேவனின் நிபந்தனைகளின்படி தொழுது கொள்ளுவது அவசியம்.

கர்த்தருடைய சபை எந்த வகை ஆராதனையில் நிலைத்திருக்க வேண்டும்? அறியாமையின் ஆராதனையில் நிச்சயமாக இல்லை. மனுஷருடைய கற்பனையின் படியும் உபதேசங்களின்படியும் கூட இல்லை. மாறாக தேவனால் ஏற்றுக்கெள்ளப்படத்தக்க வகையில் ஆவியோடும் உண்மையோடும் இருக்க வேண்டும். புதிய ஏற்பாட்டு பக்கங்களை நாம் திருப்பும்போது, தேவனுடைய நேரடிக் கட்டளை மற்றும் சபை தரித்திருந்த ஆராதனையின் ஐந்து பாகங்களைக் குறித்த முன் மாதிரிகளை நாம் அறிகிறோம்.

1. **அவர்கள் ஒன்று கூடி வேத வசனங்களைக் கற்றனர்:** தீமோத்தேயுவுக்கு தனது இளம்வயது முதலே வசனம் கற்பிக்கப்பட்டிருந்த போதிலும், (2தீமோ.3:15) வாலிப பிரசங்கியாராகிய அவனுக்கு பவுல் அறிவுறுத்திக் கூறும்போது, "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கிறவனாயும், உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" என்றான் (2தீமோ.2:15). அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் விசேஷமாக ஆராதனையில் கூடிவரும்போது இது பொருந்தும். அப்போஸ்தலர்20:7-ல் தேவ வசனத்தை கற்கும் முறையினை பவுல் சகோதரர்களுக்கு பிரசங்கிப்பதை வாசிக்கிறோம்.
2. **அவர்கள் ஜெபித்தார்கள்:** பெந்தெகொஸ்தே நாளில் ஜனங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தபின் "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும்,

அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" என்று வாசிக்கின்றோம் (அப்.2:42). கர்த்தருடைய பிள்ளைகள் ஜெபத்தின் மூலம் பரலோகப் பிதாவினிடத்தில் பேசுகின்ற வாய்ப்பைப் பெறுகின்றனர். பிற கிறிஸ்தவர்களுடன் கூடிவரும் ஒரு கிறிஸ்தவன் ஜெபிக்காமலிருப்பதை என்னவென்று சொல்வது?

3. அவர்கள் துதித்துப் பாடினார்கள்: பவுல் தனது சகோதரர்களுக்கு எழுதும்போது, "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும், ஞானப் பாட்டுகளினாலும், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி" (எபே.5:19) என்று எழுதுகிறான். கொலோ.3:16, எபி.13:5-யும் இத்துடன் வாசிக்கவும். இரண்டு வகை இசைகள் உண்டு. ஒன்று குரலிசை மற்றொன்று வாத்தியக்கருவி இசை. தேவன் எப்படிப்பட்ட இசையை விரும்புகிறார்? அவர் குரலிசையையே விரும்புகிறார். இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ண வேண்டுமென்று பவுல் கூறுகிறான். இது வாத்தியக் கருவியிலிருந்து வருகின்ற இசையைத் தவிர்க்கிறது. ஆதிக் கிறிஸ்தவர்கள் தேவனுக்கு துதிகளைச் செலுத்தி பாடினார்கள். நூற்றாண்டுகளுக்குப் பிறகு இசைக்கருவிகளை மனிதன் சேர்த்தானேயன்றி தேவன் அதைக் கட்டளையிடவுமில்லை, அதை ஏற்றுக்கொள்வதுமில்லை. இயந்திரத்தனமான ஜெபத்தால் தேவனைத் துதிப்பது எப்படி இயலாதோ அப்படியே இசைக் கருவியுடன் பாடுகிற பாடலினால் தேவனைத் துதிக்க இயலாது.

4. கர்த்தருடைய பந்தியிலே பங்குபெறும்படி அவர்கள் கூடிவந்தனர்: அப்போஸ்தலர்20:7-ல் நாம் இதற்கான முன் மாதிரியைக் காண்கிறோம். மத்தேயு26:26-28, 1கொரி.11-படி கிறிஸ்துவின் சரீரத்தை நினைவு கூரத்தக்க வகையில் அப்பத்திலும், கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவு கூரத்தக்கதாக திராட்சை இரசத்திலும் பங்கு பெறவேண்டும். இந்த நாள் வரை நாம் இதைத் தொடர்ந்து செய்தல் அவசியம்.

5. அவர்கள் தங்கள் பணத்தைக் கொடுத்தார்கள்: பவுல் கலாத்தியர் மற்றும் கொரிந்து பட்டணத்திலிருந்த சகோதரர்களுக்கு கட்டளையிட்டு "நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும், தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்" என்று சொன்னார் (கொரி.16:2). 2கொரி9:7-யும் வாசிக்கவும்.

ஆதிக் கிறிஸ்தவர்கள் தேவனை தொழுது கொள்ளும் படி வாரத்தின் முதல் நாள்தோறும் கூடிவந்தார்கள் (அப்.20:7,1கொரி.16:2). "சபை கூடிவருதலை சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்தி சொல்ல வேண்டும்" என்று அவர்கள் எச்சரிக்கப்பட்டார்கள் (எபி.10:25). இன்று கிறிஸ்தவர்கள் அதே மாதிரியான ஆராதனை முறைமைகளையும், ஆராதனை தினத்தையும் கைகொள்ள வேண்டியதால், அதே மாதிரியான அறிவுரையையும் பெற வேண்டியவர்கள்.

சபையின் ஆராதனை மிகவும் எளிமையானது ஆனால் அந்த எளிமையே அநேகருக்கு இடறுதலாக காணப்படுகிறது. அவர்களோ, பாரம்பரியங்களையும் சடங்காச்சாரங்களையும் கொண்ட மாற்றங்களற்ற, திரும்ப திரும்ப ஜெபத்தை அலப்பிக் கொண்டிருக்கிற ஒரு நெடிய (கடினமான) காரியமாக தொழுகையைக் காணுகின்றனர். ஆனால் தொழுகை அப்படிப்பட்டதல்ல, தொழுகையைக் குறித்த தமது சித்தத்தை தேவன் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆதலால் மனிதன் சிறிதேனும் மாற்றியமைக்கும் வகையில் அது கொடுக்கப் படவில்லை. அப்படிச் செய்வோர் அதனுடன் ஒன்றைக் கூட்டவோ, குறைக்கவோ செய்து அதன்மேல் கூறப்படும் சாபக்கேட்டை தன்மீது வரவழைத்துக் கொள்ளாமல் இருக்க இயலாது. தேவன் பேசியிருக்கிறார், ஆதலால் அவருடைய ஜனங்கள் அவருக்கு கீழ்ப்படிய வேண்டியது அவசியம். அப்பொழுது மட்டுமே, தேவன் ஆராதிக்கப்படுவார், துதிக்கப்படுவார், கனப்படுத்தப்படுவார்.

## கேள்விகள்

சரியான பதில் கொடுக்கவும்:

1. சபை எதினால் உருவானது? ----------------------------------------
2. சபையின் நோக்கமென்ன? ----------------------------------------
3. கர்த்தருடைய நாமத்திலே என்ன செய்யப்பட வேண்டும்? -------
----------------------------------------------------------------
4. புதிய ஏற்பாட்டில் எத்தனை வகை ஆராதனைகள் உண்டு. என நாம் வாசிக்கிறோம்? ----------------------------------------
5. அநேக விக்கிரகத் தோப்புகளையும், மேடைகளையும் பவுல் எங்கே கண்டான்? ----------------------------------------
6. அவர்களுடைய ஆராதனையைக் குறித்து பவுல் குறிப்பிட்டது என்ன? ----------------------------------------
7. இன்றைக்கும் அப்படிப்பட்ட ஆராதனையை செய்கிற மக்கள் உள்ளனரா? ----------------------------------------

8. அவர்கள் தேவனை வீணாக ஆராதனை செய்கிறார்கள் என்று சொல்லியது யார்? ------------------------------------------------

9. அவர்களுடைய ஆராதனை ஏன் வீணானதாயிருந்தது? ----------
------------------------------------------------

10. அதற்குரிய வசன ஆதாரம் கொடுக்கவும். ---------------------------

11. கர்த்தரை வீணாய் ஆராதிக்கிற ஒரு மக்கள் கூட்டம் இன்றைக்கும் உண்டா? ------------------------------------------------

12. உண்மையுள்ள ஆராதனை என்பது என்ன? ---------------------------
------------------------------------------------

13. யோவான் 4:24-ஐ மனப்பாடமாக எழுதுக? -------------------------
------------------------------------------------

14. தேவனை ஆவியோடு தொழுது கொள்ளுதல் என்பதன் பொருள் என்ன? ------------------------------------------------

15. தேவனை உண்மையோடு தொழுது கொள்ளுதல் என்பதன் பொருள் என்ன? ------------------------------------------------

16. தேவன் தனது ஜனங்களிடத்தில் எப்படிப்பட்ட ஆராதனையை எதிர்பார்க்கிறார்? ------------------------------------------------

17. தேவனுடைய மக்கள் தொழுது கொள்ள வேண்டிய வழிமுறைகளை நாம் எங்கே வாசிக்கிறோம்? ----------------------
------------------------------------------------

18. ஆராதனையின் ஐந்து பாகங்களைக் குறிப்பிடுக? -----------------
------------------------------------------------

19. தேவன் இன்று மனிதனிடத்தில் எப்படி பேசுகிறார்? -------------
------------------------------------------------

20. தேவனுடைய மக்கள் அவரிடத்தில் எப்படி பேசுகின்றனர்? ----
------------------------------------------------

21. எத்தனை வகை இசைகள் உள்ளன? ------------------------------

22. தேவன் எப்படிப்பட்ட இசையை விரும்புகிறார்? -----------------
------------------------------------------------

23. கர்த்தருடைய பந்தி என்பது என்ன? ------------------------------
------------------------------------------------

24. கிறிஸ்தவர்கள் வாரத்தின் எந்த நாளிலே கூடி வந்தார்கள்? ------
------------------------------------------------

*-Selected*

# சந்திப்போம்! சிந்திப்போம்!

D.எபிநேசர்

உரையாடல் - 27

**யோனத்தான்:** இன்றைக்கு ஒரு இனிமையான கேள்வியோடு வந்திருக்கிறேன் தாவீது.

**தாவீது:** அப்படியா! என்ன கேள்வி அது?

**யோனத்தான்:** ஒரு பாடலுக்கு இனிமை சேர்ப்பது இசை. ஆனால் நம்முடைய சபையில் பாடும் பாடல்களுக்கு இசைக்கருவிகளை உபயோகப் படுத்துவதில்லையே ஏன்? உடனே நீ வசனத்தில் சொல்லப்படவில்லை என்று சொல்லக்கூடாது. 'தம்புருவோடும், வீணையோடும், சுரமண்டலத்தோடும் பாடுங்கள்' என்று சங்கீதத்திலே சொல்லப்பட்டும் நாம் ஏன் அதைக் கைக்கொள்வதில்லை?

**தாவீது:** லேவி6:6,7 ஆகிய வசனங்களில் பலி செலுத்தவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அப்படியானால் நாம் பலி செலுத்த வேண்டுமா?

**யோனத்தான்:** இல்லையே!இயேசுகிறிஸ்து நமக்காக கிருபாதாரபலியாகச் செலுத்தப்பட்டுவிட்டாரே! நாம் இனி பலி செலுத்த வேண்டியதில்லையே!

**தாவீது:** சரி. ஆதி17:12-ல் ஆண்பிள்ளைகள் யாவருக்கும் விருத்தசேதனம் செய்யும்படியாக தேவன் கட்டளை கொடுத்திருக்கிறாரே, அதை ஏன் நாம் செய்வதில்லை?

**யோனத்தான்:** அது இஸ்ரவேலருக்கு மட்டும் கொடுக்கப்பட்ட கட்டளை என்று கேள்விப்பட்டிருக்கிறேன்!

**தாவீது:** அப்படியானால் இஸ்ரவேலருக்கென்று கொடுக்கப்பட்ட கட்டளையை நாம் கைக் கொள்ள வேண்டியதில்லை அப்படித்தானே?

**யோனத்தான்:** அதிலென்ன சந்தேகம்? ஓய்வு நாட்கள்,

பண்டிகைகள், தசமபாகம் போன்ற ஏராளமான கட்டளைகள் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப் பட்டவைதான். அவைகளையெல்லாம் நாம் கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

**தாவீது:** அப்படியானால் இந்த இசைக்கருவிகளை உபயோகப்படுத்தும் கட்டளை யாருக்கு கொடுக்கப்பட்டது தெரியுமா?

**யோனத்தான்:** அது....வந்து... சங்கீதத்தில் சொல்லப்பட்டிருப்பது தெரியும். ஆனால் யாருக்க சொல்லப் பட்டிருக்கிறது என்று தெரியவில்லை.

**தாவீது:** சங்.81:2-4 இந்த வசனங்களைப்படி அப்போது தெரியும்.

**யோனத்தான்:** "தம்புரு வாசித்து, வீணையையும் இனிய ஓசையான சுரமண்டலத்தையும் எடுத்து, சங்கீதம் பாடுங்கள் . மாதப்பிறப்பிலும், நியமித்த காலத்திலும், நம்முடைய பண்டிகை நாட்களிலும், எக்காளம் ஊதுங்கள். இது இஸ்ரவேலுக்குப் பிரமாணமும், யாக்கோபின் தேவன் விதித்த நியாயமுமாயிருக்கிறது".

**தாவீது:** ஆக, அதுவும் இஸ்ரவேலுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை. எனவே, அதையும் நாம் செய்ய வேண்டியதில்லை சரிதானே?

**யோனத்தான்:** எப்படியாவது என்னைப் போட்டு மடக்கிவிடுகிறாய்! சரி, இதற்கு மேல் முழு விளக்கத்தையும் நீயே சொல்லிவிடு.

**தாவீது:** அதற்கு இப்போது சமயமில்லை. அடுத்த சந்திப்பில் சொல்கிறேன்.

-மீண்டும் சந்திப்போம்!

## ஆன்மீக ஆலோசனை

"நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோமர்12:2)

# புத்தியுள்ள ஸ்திரீ
# A WISE WOMAN

**J.Glory Arjunan**



ஒரு புத்தியுள்ள ஸ்திரீ வீட்டைக்கட்டுவாள் என வேதம் கூறுகிறது. குடும்பமாகிய வீடு கட்டப்பட வேண்டுமானால் அது ஒரு புத்தியுள்ள ஸ்திரீயினால் மட்டுமே கூடும். அன்பு சகோதரியே, உங்கள் குடும்பம் எப்படியுள்ளது? என்ன வந்தாலும் அசைக்கப்படமுடியாத கன்மலை கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்ட குடும்பமாக உள்ளதா? அல்லது இடிந்து சின்னாபின்னமாக கிடக்கும் ஒரு கட்டத்தைப் போல் ஆளுக்கொரு பக்கமாக சிதறிப்போய் கணவன் ஒரு வழியிலும், மகன் இன்னொருவழியிலும் மகள் மற்றொரு வழியிலும் மனம் போல் வாழ்வு என நாட்களைக் கழிக்கின்ற குடும்பத்தைப்போலிருக்கிறதா? சகோதரியே, நம் குடும்பம் நோவாவின் குடும்பத்தைப் போல் ஒரே பேழையில் பயணம் செய்து நித்திய ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்பதே தேவசித்தமாயிருக்கிறது.

அநேக கிறிஸ்தவ ஸ்திரீகள் கூட தாங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டால் அத்துடன் திருப்தியடைந்தவர்களாகவோ அல்லது தன் குடும்ப அங்கத்தினர்கள் குறித்து கவலையற்றவர்களாகவோ இருந்து விடுகின்றனர். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மாசற்ற இரத்தம் நம்மை பாவமறக்கழுவி சுத்திகரித்து நமக்கு ராஜமேன்மையைக் கொடுத்திருக்கிறது. "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1பேது2:9) என வேதம் கூறுகிறது.

யூதர்கள் அழிவின் விளிம்பில் இருந்தபோது மொர்தெகாய் எஸ்தருக்கு அதைத் தெரியப்படுத்தவும், அவள் அகத்தியமாய் ராஜாவினிடத்திற் போய், அவனிடத்தில் தன் ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணவும், மன்றாடவும் வேண்டுமென்று அவளுக்குச்

சொல்லச் சொன்னான் (எஸ்.4:8). அன்று யூதர்களுக்கு நியமிக்கப்பட்டது சரீர அழிவு. அந்த அழிவிலிருந்து யூதர்கள் காக்கப்பட வேண்டுமென எஸ்தர் ராஜாவிடம் விண்ணப்பம் பண்ணவும் மன்றாடவும் வேண்டியவளாக இருந்தாள். மேலும் மொர்தெகாய் எஸ்தருக்கு, "நீ இந்தக்காலத்திலே மவுனமாயிருந்தால் யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத்தெரியும், என்று சொல்லச் சொன்னான்" (எஸ்.4:14).

ஆனால் இன்று, "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது ..... நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (1தெச.1:7-10) என வேதம் கூறுகிறது. அன்பு சகோதரிகளே, அன்று அந்த புத்தியுள்ள எஸ்தர், நான் செத்தாலும் சாகிறேன் எனக் கூறி ராஜாவினிடத்தில் விண்ணப்பம் பண்ணி, மன்றாடி யூதருக்கும் விடுதலையும், களிப்பும், மகிழ்ச்சியும் உண்டாகப் பண்ணினாள். யூதருக்கு வெளிச்சமும், விடுதலையும் உண்டாகும்படி ராஜமேன்மை அவளுக்குக் கிடைத்திருந்தது. இன்று நமக்கோ ஆவிக்குரிய ராஜமேன்மை கிடைத்துள்ளது. இந்த ராஜமேன்மை நம்முடைய குடும்பத்தாரின் வெளிச்சத்திற்கும், விடுதலைக்கும், மகிழ்ச்சிக்கும் காரணமாயிருக்கக் கூடாதா?. 1தெச.1:7-10-ல் கூறப்பட்டுள்ளபடி தேவனை அறியாத நம்முடைய குடும்பத்தாரை நித்திய அழிவிலிருந்து காப்பாற்ற நம்முடைய ராஜாதிராஜாவும் தேவாதி தேவனுமானவரை நோக்கி விண்ணப்பம் பண்ணுவதும், மன்றாடுவதும் மிகவும் அவசியமல்லவா? அன்பு சகோதரியே, உங்கள் கணவனின் இரட்சிப்பைக்குறித்தும், பிள்ளைகளின் இரட்சிப்பைக் குறித்தும் கவலையற்றவர்களாய் இருக்க வேண்டாம். ஐயோ, இரட்சிப்பைக் குறித்து பேசினாலே வீட்டில் ரகளை தான் ஏற்படும் என்கிறீர்களா? தேவசமூகத்தில் தரித்திருந்து வேதாகமத்தின் மூலம் கர்த்தரிடத்திலிருந்து வரும் அறிவையும் புத்தியையும் பெற்றுக் கொண்டு குடும்பத்தைக் கட்ட ஆரம்பியுங்கள். உங்கள் பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை உங்கள் கணவர் பார்த்து போதனையின்றி உங்கள் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள் (1பேது.3:1,2). தேவவசனம்

தூஷிப்பப்படாதபடிக்கு உங்கள் புருஷரிடத்திலும், உங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவராகவும், தெளிந்த புத்தியுள்ளவராகவும், கற்புள்ளவராகவும், வீட்டில் தரித்திருக்கிறவராகவும், நல்லவராகவும், உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவராகவுமிருங்கள் (தீத்.2:4,5). இப்படி நடந்து கொள்ளும்போது தேவன் உங்களுக்கு உதவிசெய்வார். நீங்களும் புத்தியாய் உங்கள் குடும்பத்தை கிறிஸ்துவாகிய பேழையில் ஏறப்பண்ணுவீர்கள். எஸ்தரைப்போல துணிச்சல் கொண்டு, "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப்புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலி.4:6,7).

இதோ, கர்த்தர் சீக்கிரமாய் வருகிறார். "...... கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2பேது.3:9). எனவே நம்முடைய குடும்பத்தைக் குறித்து பாரமுள்ளவர்களாய் தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளுவோம். "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது ........" (கொரி.7:10) என வேதம் கூறுகிறது.

ராஜமேன்மையைப் பெற்றுள்ள நாம் சிலர் கவலையற்றவர்களாயிருப்பது போல நாமும் இல்லாதபடி நம்முடைய குடும்பத்தாரை, நம் ஜனத்தை அழிவிலிருந்து காப்பாற்றி அவர்களுக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், விடுதலையும் உண்டாக ஆத்தும பாரங்கொண்டு நம்முடைய ராஜாதிராஜாவும் தேவாதி தேவனுமாயிருக்கிறவரை நோக்கி, மன்றாடுவோம். வேதம் நம்மில் எதிர்பார்க்கிறபடி புத்தியாய் கிரியை நடப்பிபோம். நம்முடைய விசுவாசத்தின் கிரியைகளைக் கர்த்தர் பார்த்து நம்முடைய குடும்பம் கட்டப்படவும் கிறிஸ்துவாகிய பேழையில் குடும்பத்தார் அனைவரும் சேர்க்கப்பட்டு நித்திய அழிவிலிருந்து காக்கப்படவும் உதவிசெய்வாராக!.

*ஜெபியுங்கள்*

- கர்த்தர் செய்த எல்லா நன்மைகளுக்கும் நன்றி செலுத்தி...
- ஊருக்கு ஒரு கிறிஸ்துவின் சபை எழும்ப...
- வத்தலக்குண்டு வேதாகமக்கல்லூரியில் பயிலும் சகோதரர்களுக்காக...

# மனுஷரே ஏன்? இப்படிச் செய்கிறீர்கள்

*S. பிச்சை முத்து*

அன்பிற்குரிய வாசகர்களாகிய உங்கள் யாவருக்கும் நமதாண்டவரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் கிருபை நிறைந்த வார்த்தைகளைக் கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

லீஸ்திரா பட்டணத்தில்: தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் ஒருபோதும் நடவாத ஒரு மனிதன் பவுலின் பிரசங்கத்தைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தான். பவுல் அவனை பார்த்தது இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் உண்டென்று கண்டு,(அப்.14:10) அவனை நோக்கி: நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில் என்றான் உடனே அந்த வினாடியே அவன் எழுந்து நின்றான்.

பிறவி சப்பாணி எழுந்து நடந்ததைப் பார்த்த ஜனங்கள் பிரமித்து ஆச்சரியப்பட்டு (அப்.14:11-13) பவுலுக்கும், பர்னபாவிற்கும், அவர்கள் வணங்கிய யூப்பித்தர், மெர்க்குரி என்ற தெய்வங்களின் பெயரைச் சூட்டி மாலைகளை அவர்களுக்குச் சூட்டவும், எருதுகளைக் கொண்டுவந்து பலியிடவும் மிகுந்த ஆவலாயிருந்தனர்.

இன்றைய உலகில் மனிதர்கள் புகழைத்தேடி, சுயமகிமையைத்தேடி தங்களையே மெச்சிக்கொள்கிறமக்கள், ஞானத்தையும், புத்தியையும் தந்து மனுஷருக்கு ஜீவனையும், சுவாசத்தையும் தருகிற பரலோகத்தின் தேவனின் நாமத்தை மகிமைப்படுத்த மறந்து விடுகின்றனர். பின்வரும் வசனங்களை வாசியுங்கள்: (கொலோ3:17; 2கொரி.10:17-18) தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன். அன்பிற்குரியவர்களே பவுலும், பர்னபாவும் இதனை உணர்ந்திருந்தனர். ஆகவே அவர்கள் என்ன செய்தார்கள் என்று பாருங்கள்.

பவுலும், பர்னபாவும்: கூட்டத்திற்குள்ளே ஓடி தங்கள் வஸ்திரங்களை கிழித்துக்கொண்டார்கள் ஆத்திரத்தை அடக்கமுடியாத செயல். மனுஷரே! ஏன் இப்படி செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்கள்தானே என்றனர். நீங்கள் மனுஷகைகளினால் செய்யப்பட்ட இந்த தேவர்களை விட்டு விட்டு வானத்தை, பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்கு மனந்திரும்புங்கள் என்றுரைத்தனர்.

இயேசுகிறிஸ்து: 40 நாள் உபவாசம் முடிந்தபின்னர் பிசாசானவன் அவரை உயர்ந்த மலையில் கொண்டுபோய் நிறுத்தி நீர் என்னைப் பணிந்து கொண்டால் பூமியின் ராஜ்யங்களையும் உமக்குத்

தருவேன் என்றான். நமதாண்டவரின் பதில் என்ன? "அப்பாலே போ சாத்தானே உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்" (மத்.4:10).

பேதுரு : கொர்நெல்யு, இரட்சிப்பை அறிவிக்க வந்த பேதுருவின், பாதத்தில் விழுந்து பணிந்து கொண்டபோது, நானும் ஒரு மனுஷன்தான் என்றானே தவிர அவனுடைய பணிந்து கொள்ளுதலை அவன் ஏற்றுக்கொள்ளவில்லை(அப்10:26). ஆனால் ஏரோதுவைப் பார்த்து: மனுஷர்கள் இது தேவசத்தம் என்ற உடன் அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் அடிக்கப்பட்டான் (அப்12:21-23).

தேவதூதன்: வெளிப்படுத்தின விசேஷம் எவ்வளவு அருமையான புத்தகம். பத்முதீவிலே இக்காரியங்களை வெளிப்படுத்தின தேவதூதனின் கால்களில் யோவான் விழுந்து பணிந்து கொண்டான். தேவதூதனின் பதில் என்ன? "நீ இப்படிச் செய்யாதபடிக்கு பார்; உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கதரிசிகளோடும் இந்தப் புஸ்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்களோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள் என்றான்" (வெளி.22:9).

நீங்கள் எப்படிச் செய்து கொண்டிருக்கிறீர்கள்: நாம் ஜீவனுள்ள தேவனுடைய சந்ததி, மனிதரின் கையினால் செய்யப்பட்ட எதையும் நாம் வணங்கவோ, அல்லது நம் வீடுகளில் வைத்துக்கொள்ளவோ கூடாது. நாம் வைத்துக் கொள்ள வேண்டும் என்றால் ஆவியானவர் வேதாகமத்தில் அதை நமக்குச் சொல்லியிருப்பார்(அப்17:29). தேவன் எரிச்சல் உள்ளவர் (யாத்.20:3-5). மனிதர்களைப்போலவும் புனிதர்களைப்போலவும் வைக்கவேண்டாம். மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள் (பிர9:5). தேவனுடைய ஆலயத்திற்கும் விக்கிரகத்திற்கும் சம்பந்தமேது (2கொரி.6:16). படங்கள், சிலைகள், சிலுவைகள் மனிதரின் கைவேலையல்லவா? தேவன் அதில் பிரியப்படுவாரா? தேவன் ஜீவனுள்ளவர்.

பேசாதவைகளும், நடக்காதவைகளும்,தனக்கு முன்வைக்கப்படுகிற எந்தவொன்றையும் எடுத்துப் புசிக்காதவைகளையும் எடுத்து எறிந்துவிட்டு எபேசுவின் மந்திரவாதிகள் செய்ததுபோல தீயிட்டு கொளுத்துங்கள். மோசே இஸ்ரவேல் ஜனங்கள் உண்டாக்கின பொன் கன்றுக்குட்டியை தீயிலே கொளுத்தி சாம்பலாக்கினான் (யாத்.32:20). அன்பிற்குரியவர்களே விக்கிரக வழிபாட்டிற்கு விலகி ஓடுவீர்களாக (1கொரி.10:14). அப்போது தேவனுடைய நாமம் நம்மூலம் மகிமைப்படும். தேவனும் குமாரனும் ஆவியானவரும் நம்மை ஆசிர்வதிப்பாராக !

சிறுவர் பகுதி

# எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயிற்று நம்பிக்கை அற்றுப்போயிற்று



எலும்புக்கூடு பார்த்திருக்கிறீர்களா? பள்ளி ஆய்வுக்கூடத்தில் பார்த்து இருப்பீர்கள். அம்மாதிரியான உலர்ந்துபோன எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவிலே எசேக்கியேல் தீர்க்கதரிசியை கர்த்தர் கொண்டுபோனார். நீங்களா இருந்தா, பார்த்து பயந்துபோயிருப்பீங்க. எசேக்கியேல் தீர்க்கதரிசியை அந்த எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கை சுற்றி நடக்கப்பண்ணினார். பின்பு, மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்டார்; அதற்கு எசேக்கியேல்: கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர் என்றான்.

அப்பொழுது கர்த்தர் நீ இந்த எலும்புகளைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்து அவைகளைப் பார்த்து உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள் நான் உங்கள்மேல் நரம்புகளைச் சேர்த்து, உங்கள் மேல் மாம்சத்தை உண்டாக்கி, உங்களைத்தோலினால் மூடி, உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன் அப்பொழுது நீங்கள் உயிரடைந்து, நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்களென்று உரைக்கிறார் என்று சொல் என்றார். அந்தப்படியே எசேக்கியேல் சொல்ல ஒரு இரைச்சல் உண்டாகி ஒவ்வொரு எலும்பும் தன் தன் எலும்போடே சேர்ந்து அவர்கள் உயிரடைந்து காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்.

இஸ்ரவேலருக்கு பாடம் புகட்டவே கர்த்தர் இவ்விதமான காரியத்தை எசேக்கியேலுக்கு முன்பாக நடப்பித்தார். நம்மில் அவிசுவாசமுள்ளவர்களாக இருப்பவர்களுக்கும் இது பாடமாக அமையும். இதோ, அவர்கள் எங்கள் எலும்புகள் உலர்ந்து போயிற்று; எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று; நாங்கள் அறுப்புண்டு போகிறோம் என்கிறார்கள். நான் உங்கள் பிரேதக் குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக் குழிகளிலிருந்து வெளிப்படவும், உங்களை இஸ்ரவேல் தேசத்துக்கு வரவும்பண்ணுவேன். அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள் என்றார். நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்து செத்து நாலு நாட்களான லாசருவை கல்லறையிலிருந்து எழுப்பினார் அல்லவா? அந்தப்படியே அவர் எழுப்ப வல்லவர்.

இந்த இஸ்ரவேலர்களைப் போல எங்கள் எலும்புகள் உலர்ந்து போயிற்று, எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று, நாங்கள் அறுப்புண்டு போகிறோம் என்று அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசாதிருங்கள். உலர்ந்து போன எலும்புக்கு உயிர் கொடுக்கும் தேவன் நம் கர்த்தர். அவர்மீது அசையாத நம்பிக்கை வைக்க வேண்டும். வைப்பீர்களா!

*மனப்பாட வசனம்:*

*"என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள்" (எசேக்கியேல்37:14).*

## வேத அறிவுப்போட்டி எண் 50 -ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1.மகத்தான பர்வதங்கள் | -சங்36:6 | வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்தையும் | -நியா17:4 |
| 2.பவுல் | -கலா6:14 | 6.தேவனுக்கு | -கொலோ1:20 |
| 3.அபாயாவின் புத்திரர், கோசின் புத்திரர் | -எஸ்றா2:61,62 | 7.பரிதானம் | -உபா10:17 |
| 4.பலிபீடத்தோடே | -1கொரி10:18 | 8.சாந்தகுணத்தைக் | -தீத்3:2 |
| 5.மீகாவின்தாய்,வெட்டப் பட்ட ஒரு சுரூபத்தையும் | | 9.ஏதோமியர் | -மல்1:4 |
| | | 10.இயேசுகிறிஸ்து | -எபி7:24 |

## வேத அறிவுப்போட்டி எண் 50 -ல் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| P.ஆனந்தராஜ் | -ஈரோடு | A.பிஜி | -கோவை |
| P.அலிஸ்மேரியம்மாள் | -வதிலை | N.கமலவேனி | -சென்னை |
| A.ஆனந்த் | -மதுரை | T.வேலுச்சாமி | -ஜேபாளை |
| S.தண்டபாணி | -சிலுவத்தூர் | J.S.நிரமலாஜான் | -மதுரை |
| K.பிரஜிதா | -ஈரோடு | M.சரவணன் | -செபாளை |
| குளோரிபௌல்ஜர் | -சென்னை | G.செபாஸ்டின் | -செபாளை |
| P.S.லலிதாபிரேமகுமாரி | -மதுரை | V.கோவலன் | -மதுரை |
| R.கலாவதிராஜா | -சத்திரபட்டி | T.சத்தியசீலன் | -மலையடிபட்டி |
| Mrs.வனிதாசாமுவேல் | -மதுரை | C.லட்சுமிதேவி | - |
| G.கிரேஸ்விடியா | -மதுரை | A.சேவியர்மேரி | -மதுரை |
| R.பானுமதி | -ஜேபாளை | X.எஸ்தர்சேகர் | கோபி |

## பொது அறிவுச் சோதனை

1. முதன் முதலாக எய்ட்ஸ் கண்டு பிடிக்கப்பட்ட ஆண்டு எது?
   அ)1981 ஆ)1982 இ)1980
2. அதிகப்படியான கொலஸ்ட்ரா்லின் விளைவு என்ன?
   அ)காச நோய் ஆ)அதிரோஸ்லிராஸிஸ் நோய் இ)வாத நோய்
3. தண்டி யாத்திரையுடன் தொடர்புடையது எது?
   அ)ஒத்துழையாமை இயக்கம் ஆ)வெள்ளையனே வெளியேறு இ)சட்ட மறுப்பு இயக்கம்
4. ஜப்பானில் எறியப்பட்ட முதல் அணுகுண்டின் பெயர் என்ன?
   அ)லிட்டில் பாய் ஆ)குட்– பை இ)பேபி
5. உலக வங்கி இருக்கும் இடம் எது?
   அ)நியூயார்க் ஆ)வாஷிங்டன் இ)இங்கிலாந்து

விடைகள்:1.1981 2.அதிரோஸ்கிலராஸிஸ் நோய் 3.சட்டமறுப்பு இயக்கம் 4.லிட்டில் பாய் 5.வாஷிங்டன்

# வேத அறிவுப் போட்டி எண்-51

*போட்டியாளர்கள் கவனத்திற்கு,*

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25-தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். <u>உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும். விடைகளை ஆங்கிலத்தில் எழுதுபவர்களுடைய பெயர் நீக்கப்படும்.</u>*

1. யோவான் சொன்னதைக் கேட்டு, இயேசுவுக்குப் பின்சென்ற இரண்டுபேரில் ஒருவன் பேதுருவின் சகோதரன் அவன் பெயர் என்ன?
2. என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதியும் என்று சொல்லி, சத்தமிட்டு அழுதவன் யார்?
3. நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு என்று யார் யாருக்கு சொல்வது?
4. நீ என்னைப் பார்க்கிலும் நீதிமான் என்று யார் யாரைப் பார்த்து சொல்கிறான்?
5. கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை எப்படி நிறைவேற்ற முடியும்?
6. தோலுக்குப் பதிலாகத் தோலையும், தன் ஜீவனுக்குப் பதிலாகத் தனக்கு உண்டான எல்லாவற்றையும், மனுஷன் கொடுத்துவிடுவான் என்றவன் யார்?
7. அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் எதற்கு எதிர்த்து நிற்கிறான்?
8. தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு எவைகளையும் அளிக்கிறார்?
9. ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் எதிலே தள்ளப்பட்டான்?
10. தெக்கேல் என்பதற்கு அர்த்தம் என்ன?

## நடப்புச் செய்திகள்

- மனித குளோனிங் சர்வதேச அளவில் தடை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக ஐ.நா.வில் தீர்மானம் கொண்டுவரப்படலாம் என்றும் கருதப்படுகிறது.
- இந்தியாவில் 66 லட்சம்பேர் உப்பில் அயோடின் குறைபாடால் பாதிக்கப்பட்டுள்ளதாக சென்னை யூனிசெப் முதுநிலைதிட்ட அலுவலர் ரெங்கராவ் தெரிவித்துள்ளார்.
- தமிழக முன்னாள் முதல்வர் காமராஜரின் நூற்றாண்டு விழாவையொட்டி, அவரது உருவம் பொறித்த நாணயத்தை பிரதமர் வெளியிட்டார்.
- "அணு ஆற்றலை ஆக்கப்பணிகளுக்குக்காக மட்டுமே பயன் படுத்தும் இந்தியாவுடன் உலக நாடுகள் அனைத்தும் இணைந்து செயல்பட வேண்டும்" என்று பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தியுள்ளார்.

Owned and published by B.Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202 Editor: **B.Arjunan.**

Registered with Registrar of Newspapers for India under No.TNTAM/2000/3629
Postal Registration. No. TN/SR-164/2003-2005 Lincensed to Post without prepayment
License No.TN/WPP-25/SR/2003-2005 Posted at Batlagundu Post Office on 10th Nov. 2004.



**எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க**
**அன்புடன் அழைக்கிறோம்.**
**கிறிஸ்துவின் சபை**
7.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202
திண்டுக்கல் மாவட்டம்.
போன்: 04543-263278 செல்: 9443558041
E-mail:thewordofchrist@sansarnet.in



"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32)



'ஒரே வழி' தபால்வழி வேதபாடதிட்டம்
**The Master Course**
தமிழில்
இருபது வயதிற்கு மேற்பட்டவர்கள்
இன்றே ரூ.30/- செலுத்தி
இப்பாடத்திட்டத்தில் சேர்ந்து ஒரு வருடத்தில் முடித்து
Certificate பெற்றுக்கொள்ளுங்கள்
**THE ONE WAY**
**BATLAGUNDU BIBLE COLLEGE**
P.O. Box.5, BATLAGUNDU - 624 202
S.INDIA

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் ஆண்டு சந்தா
இந்தியா -ரூ.50/-
வெளிநாடு - ரூ.500/-
தனிப் பிரதி - ரூ.5/-

**Monthly Magazine**

**To**

**From**

Editor
THE WORD OF CHRIST
P.O.Box.No.5
Batlagundu - 624 202
S. India